முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 46 ஒலி 94 பிரசோற்பத்தி மாசி 17 (29.02.1992) சனி

★ தியகம மக்கள் வங்கி

வங்கிக் கொள்ளையர் சூடு பாதுகாப்பு ஊழியர் பலி!

களனிப்பகுதி தியகம மக்கள் வங்கிக் கிளையில் நேற்று பிற்பகல் கொள்ளை முயற்சி ஒன்று இடம் பெற்றுள்ளது ஆயுதங்கள் தாங்கிய ஐவர் கொண்ட கோஷ்டி வான் ஒன்றில் வந்து மேற்படி வங்கியின் பாதுகாப்பு ஊழியர்கள் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்தது இதில் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் பலியானார் மற்றவர் படுகாயமடைந்தார். இதைத்தொடர்ந்து வங்கியினுள் நுழைந்த அந்த ஆயுதக் கோஷ்டியினர் வங்கியின் பாதுகாப்பு பெட்டக —04 ஆம் பக்கம் பார்க்க

வாழைச்சேனையில் புலிகள் அதிரடி

20 படையினரின் சடலங்கள் மீட்பு

கொழும்பில் பதிவுசெய்யாத 17தமிழ் இளைஞர்கள் கைது

வடக்கு கிழக்குப் பகுதியிலிருந்து கொழும்பிற்கு இடம் பெயர்ந்த 17 தமிழ் இளைஞர்கள் வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது பெயர் விவரங்களை பொலிஸில் பதிவுசெய்யவில்லை எனவும், இதனால் தாம் அவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாகவும் வெலிக்கடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ராஜகிரிய, நாவல, ஒபேயசேகரபுர ஆகிய பகுதிகளில் வைத்தே இந்த தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 06

காங்கேசன்துறை துறைமுகம் பாவனைக்கு திறக்கப்படும்?

யாழ் மாவட்டத்திற்கு தேவையான உணவுப்பொருள்களை கொண்டு வருவதற்கு வசதியாக காங்கேசன் துறை துறைமுகம் எதிர்வரும் 5ஆம் திகதியளவில் பாவனைக்கு திறந்து விடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே இங்குள்ள களஞ்சியங்களில் 2500 மெற்றிக் தொன் உணவுப்பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன இருகலஞ்சியங்களின் திருத்த வேலைகள் முடிவடைந்து விட்டதாகவும் மற்றைய களஞ்சியத்திருத்த வேலை நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

இத்துறைமுகம் திறந்த ...04 ஆம் பக்கம் பார்க்க

பூநகரியில் சிக்கிய லொறிகள் தெற்கிற்கு சொந்தமானவை

பூநகரிப்பகுதியில் படையினரிடம் சிக்கியுள்ள லொறிகள் விரைவில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் மூலம்யாழ் அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளன.

இவற்றை விடுவிப்பது குறித்து அரச அதிபர் கொழும்பில் பேச்சுநடத்தியபோது, இந்த லொறிகள் தென்பகுதியைச்சேர்ந்தவையெனவும் குண்டுகள் வைப்பதற்குபயன்படுத்தப்பட்டதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்

வடபகுதி கரிமையாளர் இவை தம்முடையவை என அத்தாட்சிப்படுத்தினால் அவை விடுவிக்கப்படும் என படை அதிகாரிகள் தெரிவித்தனராம் 06, 47, 04

இந்திய - ஸ்ரீலங்கா கிரிக்கெட்

கடும் மழை காரணமாக ஆட்டம் இடை நிறுத்தம்!

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று அவுஸ்திரேலிய மக்கேயி மைதானத்தில் நடைபெற்ற இந்தியா - ஸ்ரீலங்கா அணிகளுக்கிடையிலான போட்டி மழை காரணமாக நிறுத்தப்பட்டது

எனினும் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. முதல் நாளே கடும் மழை பெய்திருந்தமையினாலும் மைதானம் சீரற்று இருந்தது. இதனால் காலையில் போட்டியை 20 ஓவர்கள் கொண்டதாக முடிவு செய்யப்பட்டு போட்டி ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. ஸ்ரீலங்கா பந்து வீச்சாளர் ரட்நாயக்கா இரண்டு பந்துகள் வீசிய நிலையில் இந்திய அணியின் ஸ்ரீகாந்த் 4 ஓட்டங்களை ...4 ஆம் பக்கம் பார்க்க

களுத்துறைச் சிறையில் உள்ளோர் விவரம்

களுத்துறை சிறையில் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்குப்பகுதிகளைச்சேர்ந்த 430பேர்களின் பெயர்விவரம் வெளியிடப்பட்டுள்ளது,

இப்பெயர் விவரங்களை முரசொலி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். 04, 06, 47

ரோந்து அணிமீது ஒரு மணிநேர தாக்குதல் ஆயுதங்களும் மீட்பு

வாழைச்சேனை காகித தொழிற்சாலை இராணுவத்தினரின் ரோந்து அணி மீது நேற்று முன்தினம் மாலை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 20க்கும் மேற்பட்டபடையினர் பலியாகினர் இவற்றில் 20 படையினரின் சடலங்களையும் 20 ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

வாழைச்சேனை காகித தொழிற்சாலை முகாமிலிருந்து இராணுவத்தினர் தேடுதல்களை நடத்தும் பொருட்டு புறப்படுச் சென்றனர்.

சுமார் 100 பேர் கொண்ட இந்த இராணுவ அணி மீது புலிகள் திடீரென தாக்குதலை ஆரம்பித்தனர்.

படையினர் மீது ஒருமணி நேரம் புலிகள் விடாது தாக்குதலை நடத்தினர்.

படையினருக்கு உதவ வந்த ஹெலிகப்டர் ஒன்றின் மீதும் புலிகள் தாக்குதலை நடத்தவே அது திருப்பிச்சென்றுவிட்டது. இம்மோதலின்பின் படையினரின் 20சடங்களை மீட்ட புலிகள் பின்னர் அவற்றை எரித்துவிட்டனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

வாழைச்சேனை படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் சடலங்களுடன் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

- ★ ஏ. கே. எக். எம். ஜி - 01
- ★ ரி-56 துப்பாக்கிகள் - 14
- ★ ரி-81 துப்பாக்கிகள் - 05
- ★ ரி-56 மகஸீன்கள் - 64
- ★ ரி-81 மகஸீன்கள் - 16
- ★ ஏ. கே. எக். எம், ஜி மகஸீன்கள் - 07
- ★ ஐ. எம் ரவைகள் - 3000
- ★ லங் - 300
- ★ ஜே. ஆர் குண்டு - 01
- ★ தொலைத்தொடர்பு சாதனம்

விமானத்தாக்குதல் தொடர்கிறது

இரு கனரக வாகனங்கள் வாகன மிதிவெடியில் சிக்கி நாசம்

நேற்று வவுனியாவில் முன்னேற முயற்சித்த படையினரின் இரு கனரக வாகனங்கள் புலிகளின் வாகன மிதிவெடியில் சிக்கி தகர்ந்தன.

ஈச்சங்குளம் பகுதியிலிருந்த சுமார் 1000 இராணுவத்தினர் கனரக வாகனங்கள் சகிதம் முன்னேறினர் இவர்களை கட்டையன் குளம் பகுதியில் வழிமறித்து புலிகள் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலின்போதே இரு கனரக வாகனங்கள் நாசமாக்கப்பட்டன. படையினர் மீது புலிகள் இரு மணி நேரம் தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டனர்.

3 பொம்மர்கள், 2 ஹெலிகப்டர்கள் ஓர் வேவு விமா ...04 ஆம் பக்கம் பார்க்க

மண்டைதீவில் ஷெல் தாக்குதல்

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை 11 மணியளவில் கரையோரப்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்

இந்த ஷெல் குண்டுகளில் சில கொட்டடி கரையோரப் பக்கமாக வீழ்ந்து வெடித்ததாக கூறப்பட்டது. 47

குடாக்கடலில் பிடிபட்டவர்கள் விடுதலை செய்யப்படுவர்

குடாக்கடல் பகுதியில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது படையினரால் கைதான மீனவர்களை விடுவிக்க பாதுகாப்பு அமைச்சு சம்மதம் தெரிவித்துள்ளது.

ஆனால் இவர்கள் மீதான விசாரணைகள் தற்போது நடைபெறுவதாகவும், குற்றம் செய்யாதவர்களும், வழக்குத் தாக்கல் செய்யப்படாதவர்க ...04 ஆம் பக்கம் பார்க்க

★ வல்புல்ல ராகுல தேரோ கண்டனம்

அரசு தனது லாபம் கருதியே புத்தமதத்தை பயன்படுத்துகிறது!

அரசியல் லாபத்தை பெற்றுக்கொள்ளவே தற்போதைய அரசு புத்த மதத்தை பயன்படுத்துகிறது என களனி துணைவேந்தர் வல்புல்ல ராகுல தேரோ அரசை சாடியுள்ளதாக ஐலன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது, எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிங்கள பௌத்தர்களின் பெரும்பான்மை வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே அரசு செயற்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள ராகுல தேரோ, 2300 இளம் பிக்குகளின் துறவற தொடக்க விழாவை அரசு —04 ஆம் பக்கம் பார்க்க

பிரயாணப்படி விவரம் அறிவிப்பு!

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரினால் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் தனவரி முதல் அமுலுக்கு வந்துள்ள பிரயாணப் படிகள் தொடர்பான விவரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தினுள் உத்தியோக பூர்வ வெளிக்களக் கடமையில் ஈடுபடுவோருக்கு ஒருங்கிணைந்த பிரயாணப் படி அவர்கள் பெறும் சம்பளத்துக்கேற்றவாறு கணிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வருடாந்தம் 15720 ரூபாவும் அதற்குக்கீழும் சம்பளம் பெறுவோருக்கு 125 ரூபாவும், 15721 ரூபாவிலிருந்து 24240 ரூபா வரை பெறுவோருக்கு 150 ரூபாவும், 24241 ரூபாவிலிருந்து 47999 ரூபா வரை பெறுவோருக்கு 200 ரூபாவும், 48,000 ரூபாவும் அதற்கு மேலும் பெறுவோருக்கு 250 ரூபாவும் ஒரு நாளுக்குரிய இணைந்த படியாகக் கிடைக்கும். (15)

தமிழீழ காவல் துறை
பதவி வெற்றிடங்கள்

1. அ) உப பரிசோதகர் (Sub Inspectors)

தகைமைகள்:- க. பொ. த. (சா/த) 6 பாடங்களில் சித்தி.
5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க. பொ. த. (உ/த)
உயரம்;- 5 அடி 6 அங்குலம்
வயது:- 18 - 25 வரை

ஆ) காவலர் (பொலிஸ்) பதவி
தகைமை:- க. பொ. த. (சா/த) ஆகக்குறைந்தது 8-ம் வகுப்பு.
உயரம்:- 5 அடி 6 அங்குலம்
வயது:- 18 – 25 வரை

2. அ) சிறைக்காவல் மேற்பார்வையாளர்கள் - உப பரிசோதகர்தரம்

தகைமை:- க. பொ. த. (சா/த) 6 பாடங்களில் சித்தி. 5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்,
உயரம்:- 5 அடி 6 அங்குலம்
வயது:- 18 - 25 வரை

ஆ) சிறைக்காவலர்
தகைமை:- 8-ம் வகுப்பு சித்தி
உயரம்:- 5 அடி 6 அங்குலம்
வயது:- 18 - 25 வரை

3, தையல்காரர்:-
சீருடை தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேற்கூறிய பதவிகளுக்கு ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 1992-3-02 திங்கள் காலை 9-00 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல் துறையின் செயலகத்திற்கு சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

02055

பல்கலைக்கழக அனுமதிக்கான கட்அவுட் புள்ளிகள்
6 வாரங்களில் வெளியாகும்

பல்கலைக்கழக அனுமதிக்கான புள்ளி மட்டங்கள் (கட்அவுட் மார்க்) பற்றி இன்னும் ஆறுவாரங்களில் தீர்மானிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றோர் இந்த கட்அவுட் புள்ளிகளின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

தெரிவாகும் மாணவர்கள் இவ்வருடம் அக்டோபர் மாதமளவில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவர்.

1990ஆம் ஆண்டுக்குரிய உயர்தரப் பரீட்சை வடக்கு கிழக்குப் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதமே நடத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அரச பதிவுகளில் முஸ்லிம்களை
'லங்காயுவனக்க' எனகுறிப்பிட ஆலோசனை

இலங்கையில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளில் சாகியத்தைக் குறிப்பிடும் இடத்தில் தங்களை 'லங்காயுவனக்க' எனக்குறிப்பிடுமாறு பொதுநிருவாக அமைச்சு முஸ்லிம் பிரமுகர்கள் கோரியுள்ளனராம்

தற்பொழுது முஸ்லிம்களைக் குறிப்பதற்கு சிங்களத்தில் 'லங்கா மறக்கல' என்ற பதமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த மாற்றத்தை அமுல் செய்வது குறித்து பொதுநிருவாக அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொடுப்பனவு விண்ணப்பம்

சொத்தணி அதிபர்களாக கடமையாற்றுபவர்களின் கடமை தொடர்பான படி மற்றும் பிரயாணப்படிகொடுப்பனவு விவரங்களை விரைவாக நிரப்பி கோட்டக்கல்வி அதிகாரிகளின் விதப்புரைகளுடன் முதல் மாதத்துக்கான கொடுப்பனவு விபரங்களை அடுத்து வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக யாழ் கல்வித் திணைக்கள பொது நிர்வாகக் கிளைக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் கல்வித்திணைக்கள கணக்காளர் சகல கோட்டக் கல்விக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார். (15)

வாராந்தக் கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 1 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறும். டீவ்வரை அமர்வில் கவிஞர் வே குமாரசாமி அவர்கள் "எனது இலக்கிய வெளிப்பாடுகளும் அனுபவங்களும்" என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

நாடகம் நேரமாற்றம்

இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவிருந்த 'சத்தியவான் சாவித்திரி' நாடகம் பிற்பகல் 1.30 மணிக்கு நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர் காட்சி முன்னர் அறிவிக்கப்பட்டது போல பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறும் என பல்கலைக் கழக தமிழ்மன்றம் அறிவித்துள்ளது.

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 — 10 — 1937

உதிர்வு 13 — 02 — 1988

இணுவில் கிழக்கு

தி. சி. சண்முகலிங்கம்

திதி: 29. 02. 1992

அன்புத்தெய்வமே பாசத்தின் பிறப்பிடமே
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
நான்கு ஆண்டுகள் மறைந்ததுவே
உங்களது நினைவில் உயிர்வாழ்கிறோம்
உங்களது ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகிறோம்.

"சுகந்தம்"
இணுவில் கிழக்கு

அன்பு மனைவி, மக்கள்,
சுற்றத்தார்.

02047

தெய்வத்தின் பாதத்தில்

ஒருவனை ஒருவன் மிதித்து தன் காலை பெலப்படுத்துவதே உலக இயற்கை. அத்தகுணத்தில் மூள்வதே யுத்தம். அது எத்தனை கண்ணீரை, துக்கத்தைப் பீறிடச் செய்கிறது. இவ்வேளை பக்தர்களின் செயற்திறன் என்னை? நாமும் கோயில் திறந்திருந்தால் கும்பி டுவிட்டுப் போவதா? இல்லை! எமக்கொரு யுத்தம் உண்டு முழங்காலில் தெய்வத்தை தேடுவதே தெய்வம், இறைமகிமை எல்லாம் சுலபமாகும், ஆகவே எம் கண்ணீர், துன்பம், துயரம் நீங்க தெய்வத்தை தேடி, பிணியாளிகள் குணமாகவும், சமாதானம் தேடியும் ஜெப ஆராதனை நடைபெறும்.

வாருங்கள் விசுவாசியுங்கள்!

இவர் 15 வருட காலமாக ஆஸ்மா நோயுடன். 6 மாத காலம் கை, கால் வழங்க முடியாமலும் இருந்தவர். ஜெபிக்கப்பட்டு குணமாகினார்.

இவர் தொண்டையில் ஓர் கட்டி ஏற்பட்டு உமிழ்நீர் கூட விழுங்க முடியாமலிருந்தவர். ஜெபத்தில் குணமாகினார்.

இவர் மதுவுக்கு அடிமையாகி மீள முடியாத நிலையில் இருந்தார். தெய்வத்தால் மீட்கப்பட்டார்.

இடம்: ரட்ணம் மைதானம், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13
காலம்: 1992, மார்ச், 8 - 15 வரை தினமும் பி. ப. 5.30 மணி
செய்தி: சகோதரர் செ. இராஜேந்திரம்
JESUS - LIVES P. O. BOX 1944 - COLOMBO

02056

சிறுவிளம்பரம்

மணமக்கள் தேவையா

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் நிறைய இருக்கிறார்கள் மாற்றுச் சம்பந்தத்தை விரும்பாத சோடி மணமக்களுக்கு அரிய சந்தர்ப்பம். ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். 02050

★ சர்வதேச அரங்கிற்கு கொண்டுவந்து

காஷ்மீர் பிரச்சினையை பெரிதாக்க பாகிஸ்தான் முயல்கிறது

இந்தியா குற்றச்சாட்டு

காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச அரங்கிற்குக் கொண்டு வந்து இந்தியாவைக் களங்கப்படுத்த பாகிஸ்தான் தற்போது முயல்வதாக இந்திய நாடாளுமன்றத்தில் மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் குற்றம் சாட்டியுள்ளார்.

காஷ்மீர் விவகாரம் பற்றி உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களைப் பாகிஸ்தான் தற்பொழுது ஈடுபட்டு வருவதாகவும் அமைச்சர் சவான் அங்கு குறிப்பிட்டார்.

இதேவேளை காஷ்மீரில் ஜனாதிபதி ஆட்சியை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்கு இந்தியாவின் இரு சபைகளும் நேற்று முன்தினம் அங்கீகாரமளித்தன

காஷ்மீர் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து டில்லியின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்து வருகின்றமை தெரிந்ததே.

'ஆதிமூலனாய், தமிழர்க்கு தம்பி'

.'கர்நாடகத் தலைநகர் பெங்களூரில் பொலிஸாரே வன்முறையில் ஈடுபடுவதைக்கண்ட பெரியவர் ஒருவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அழைத்து வந்து பெங்களூரையே துண்டுதுண்டாகப் போட்டு விடுவோம் என உணர்ச்சி மேலீடுடன் கூறியதாக 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது. தமிழகத் தமிழரும் பாதிக்கப்படும்போது விடுதலைப்புலிகள் தலைவர் தம்பி பிரபாகரனை நினைக்கிறார்கள் என்பது இதன்மூலம் புலனாகிறது.''

இவ்வாறு முன்னாள் அமைச்சரும், பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினருமான பண்ருட்டி இராமச்சந்திரன் சென்னையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

''மூதலையிடம் மாட்டிய யானை ஆதிமூலனே என்று அழைத்ததும் திரௌபதியைத் துச்சாதனன் துகிலுரிந்த போது பரந்தாமனை அழைத்தாளாம் அதேபோல தமிழர்கள் பாதிக்கப்படுகிற

பரந்தாமனாய் சென்னையில் பண்ருட்டி

போது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை நினைக்கிறார்கள்'' என்றும் அவர் சொன்னார்.

1020 பேருக்கு நியமனம்

யாழ் மாவட்டத்தில் 1020 பேருக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது

இந்த ஆசிரிய நியமனத்தினுக்குரிய பட்டியல் யாழ் கல்விப்பணிப்பாளரிடமிருந்து விரைவில் கொழும்புக்கு கிடைக்குமெனவும் கல்விச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் ரத்தாவதுகுறித்து தொண்டாபுகார்

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் அடிக்கடி ரத்துச் செய்யப்படுவது இன உறவைப் பாதிக்கும் ஒரு நடவடிக்கை என உல்லாசப் பயணக் கிராமிய தொழிற்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்

இது குறித்து அமைச்சர் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவருக்குக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்

ரூபவாஹினியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டு வந்த தமிழ் நிகழ்ச்சிகள் சில நிறுத்தப்பட்டுள்ளதாகவோ, இடை நிறுத்தப்படுவதாகவோ தெரியவந்துள்ளது ஏதாவது காரணத்திற்காகத் தமிழ் நிகழ்ச்சிகளை ரத்துச் செய்யவோ, இடை நிறுத்தவோ வேண்டி ஏற்பட்டால் மாற்று வழிமுறைகள் செய்யப்படல் வேண்டும் எனவும் அமைச்சர் தொண்டமான் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக கடற் பகுதியில் கடற்படை ரோந்து அதிகரிப்பு!

தமிழக கடற் பகுதியில் இந்திய கடற்படையினதும் கடலோர காவற் படையினதும் ரோந்து நடவடிக்கைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

தமிழக அரசின் புதிய திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்படும் இந்த ரோந்து நடவடிக்கைகளுக்கு இந்திய மத்திய அரசு பூரண அங்கீகாரம் வழங்கியுள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

★ யாழ். பல்கலைக் கழக

மலையக டிப்ளோமா மாணவரின் பயிற்சி தென்பகுதிக்கு மாற்றம்!

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் டிப்ளோமாப் பயிற்சியைப் பெற விண்ணப்பித்த இந்திய வம்சாவளி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அப் பயிற்சி நெறி கொழும்பு பேராதனைப் பல்கலைக்கழகங்களிலேயே நடாத்தப்படுமெனத் தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது

தற்போதைய சூழ்நிலையில் மலையக மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று கல்வியைத் தொடர்வது சிரமம் என அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியதைப் படுத்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தைத் தெரிவித்துப் புதிய டிப்ளோமா மாணவரைத் தெரிவதற்காக மார்ச் மாதம் 6 ஆம் திகதி நடைபெற விருந்த நேர்முகப் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த நேர்முகப் பரீட்சை பின்னர் கொழும்பிலேயே நடாத்தப்படுமெனவும் அமைச்சர் தொண்டமான் அறிவித்துள்ளார்.

வடபகுதி விளம்பரம் இன்மையால் வருமானத்தில் பாதிப்பாம்

வடக்கு கிழக்கு நிலைமை காரணமாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாக நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் இலங்கை வானொலியிலும் தமிழ் வர்த்தக சேவையில் இடம் பெற்ற வர்த்தக விளம்பரங்களில் பெரும்பாலானவை வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்தே கிடைத்தன.

தற்போது வடக்கு கிழக்குப் பகுதி நிலைமை காரணமாக அப்பகுதி விளம்பரங்கள் கிடைக்காமையினால் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வருமானத்தில் 25 சதவீத பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

உண்மையில் ஒரு ஸ்தாபனத்தை நடத்துவதற்கு வேண்டிய நிர்வாக நேர்த்தியுடனான மிகப் பெரிய கூட்டுக் குடும்பம் ஒன்று பற்றிய தகவல் இங்கே தரப்படுகின்றது.

ஒற்றுமையே பலமாக . . . விசித்திர கூட்டுக் குடும்பம்

குழந்தைகளைத் தவிர்த்து 52 ஆண்கள், 46 பெண்கள் கொண்ட இக் குடும்பத் தலைவர் வடுவீரநாயக்கர் மதுரை மாவட்டத்தில் தேனிக்கும், தேவாரத்துக்கும் நடுவில் செல்லும் குறுக்குப் பாதையின் எல்லையில் இருக்கிறது வடுவீர நாயக்கன்பட்டி. அந்த வீடு மிகப் பிரசித்தம். தேர்தல் காலங்களில் எல்லா அரசியல் கட்சி வேட்பாளர்களும், கர்மசிரத்தையாய் அந்த வீட்டில் இருக்கும் 82 வாக்காளர்களின் ஆதரவைக் கோரி நடையாய் நடக்கவைக்கும் வீடு.

ஆரம்பப் பள்ளி மைதானம் போல . .

இந்தியாவின் மிகப் பெரிய கூட்டுக் குடும்பம் என்று வர்ணிக்கப்படுகின்ற அந்த வீட்டில் நினைத்து நினைத்துக் கட்டப்படாதது போல நீளப் படர்ந்திருக்கும் 21 அறைகள். பிரமச்சாரிகள் படுக்க என்று திறந்த மண்டபம் ஒன்று. வீட்டை விட்டுத் தள்ளி இரண்டு சமயலறைகள். ஆனால் கழிவறை, குழியலறை கிடையாது வீட்டின் முற்றத்தில் ஆரம்பப் பள்ளி மைதானம் போல ஏராளக் குழந்தைகள். வடுவீர நாயக்கருக்கு குழந்தைகளின் எண்ணிக்கையைப் பற்றித் தெரியாது. எல்லாருடைய பெயரும் கூட ஞாபகமில்லை.

முயலும் மானும்

அந்த வீட்டில் இருக்கும் 130 பேரைத் தவிர குடும்பத்திற்குச் சொந்தமான 75 ஏக்கர் நிலங்களைக் கவனிக்க வயல்களிலேயே தங்கியிருப்பவர்கள் சுமார் 30 பேர். மனிதர்களைத் தவிர முயலையும், மானையும் வேட்டையாட, வயல்களைப் பாதுகாக்க, 30 வேட்டை நாய்கள் உண்டு உழவுக்கு 7 ஜோடி காளை மாடுகள் சில கறவைப் பசுக்கள். ஒரு டஜன், சேவல்கள், கோழிகள். நூறு ஆடுகள் உண்டு.

72 கிலோ அரிசி

தினசரி சமையல் என்பதும் சாதாரண விஷயமில்லை. பகலில் கூழுக்காக 36 கிலோ கேழ்வரகு மாவோ, சோள மாவோ தேவைப்படும். முழுச் சாப்பாட்டிற்குத் தினமும் சமயலுக்குத் தேவை 72 கிலோ அரிசி. 15 கிலோ காய்கறி 6 கிலோ பருப்பு

மாறும் டியூட்டி

பெண்களின் உதவி வயலுக்கும் தேவைப்படுவதால் ஒரு மாதத்திற்கு 5 பெண்கள் சமையல் பொறுப்பை ஏற்கிறார்கள். சோறுவடிக்க ஒருவர் குழம்பும் கறியும் சமைக்க இருவர் சோழம் அரைக்க இருவர் கேழ்வரகு அரைக்க ஒருவர் ஒரு மாத 'டியூட்டி'க்குப்பின் இவர்கள் வயலுக்குச் சென்று வேறு 5 பேர் சமையல் பொறுப்பை ஏற்பார்கள்.

ஆடும், மாடும் போலவே .....

குடும்பக்கட்டுப்பாட்டிலும் தாத்தாவுக்கு நம்பிக்கையில்லை

''இங்கே வருஷாவருஷம் ஆடும், மாடும் குட்டி போடாதது போல நாங்களும் குழந்தைகளைப் பெத்துக்கிட்டிருக்கிறோம்'' என்கிறார் செல்லத்தாயி (32) என்ற குடும்ப உறுப்பினர்களில் ஒருவர்.

ஜாம் ஜாம் கல்யாணம்

செலவைக் குறைக்க 12, 13, கல்யாணங்களை ஒரே சமயத்தில் நடத்துகிறார்கள் வரதட்சணை ஏதும் கிடையாது நெருங்கிய உறவுக்குள்ளேயே மாமனையும், அத்தானையும் கட்டுவதால் அது ஒரு குடும்ப நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படுகிறது.

படிப்பும் பதவியும்

படிப்பில் ஆர்வம் இருக்கும் ஆண்குழந்தைகளை மட்டும் தான் படிப்புக்கு அனுபுகிறார்கள் ஆனால் பத்தாம் வகுப்பைத் தாண்டியவர்கள் நான்கைந்துபேர் தான், காலேஜ் படிப்புப்படித்தவர்கள் மொத்தம் மூன்றுபேர். வடுவீரநாயக்கரின் அண்ணன் மகன் கருப்பாண்டி மனநல பயாலஜியில் டாக்டர் பட்டம் பெற்று அண்ணாமலை சர்வகலாசாலையில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார், நாயக்கரின் மகன் தங்கராஜ் பி. எஸ்ஸி, பி. எல் படித்தவர். திண்டுக்கல்லில் முன்சீப்பாக இருக்கிறார், 25 வயது சௌந்தரபாண்டியன் நாயக்கரின் அண்ணனின் பேரன் எம் எஸ்ஸி. படித்து மதுரை தியாகராயர் கல்லூரியில் பணிபுரிகிறார்.

வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்று எல்லோருக்கும் ஆவேசம் இருக்கிறது. சேர்ந்து உழைத்தால் அது சாத்தியம் என்றும் புரிந்திருக்கிறது.

மே மாதம்வரை மழை பெய்யாது!

1983க்குப் பின் இவ்வாண்டு கொடிய வறட்சி!!

1983 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இவ்வாண்டு மிகக் கடும் வறட்சி நிலவும் எனக் கொழும்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

எந்நாளும் மே மாதம் வரை இலங்கையில் மழை பெய்யாது.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மழை குறைவாகப் பெய்வது வழமை. கடந்த 1983 ஆம் 87 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் கொடிய வறட்சி நிலவியது

இந்த வகையில் இவ் வருடம் மழை குறைவாகவே பெயும் மிகக் கொடிய வறட்சி இங்கு நிலவும் என வானிலை அவதான நிலையம் இது குறித்து மேலும் விளக்கமளித்துள்ளது

கடந்த நவம்பர் முதல் இலங்கையில் தொடரும் வறட்சியினால் தற்பொழுது மின்வெட்டு, நீர்வெட்டு என்பவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளமை தெரிந்ததே.

★ தமிழக அரசிடம் கலைஞர் கோரிக்கை

காவிரி இடைக்காலத் தீர்ப்புக்கு குறைவாக எதையும் ஏற்கக்கூடாது

காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்புக்குக் குறைவான, தமிழக விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய எந்தத் தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டாமென்று தமிழக மாநில அரசை தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கேட்டுள்ளார்.

1934 ஆம் ஆண்டிலிருந்து 1972 ஆம் ஆண்டு வரை கர்நாடகத்திலிருந்து தமிழகம் மேட்டூர் அணைக்குப் பாசனத்துக்காக ஆண்டுதோறும் சராசரி 300 டி. எம்.சி தண்ணீர் கிடைத்துவந்ததாகவும் அவர் சொன்னார்

இடைக்காலத் தீர்ப்பில் ஆண்டுதோறும் 250 டி. எம். சி. தண்ணீர் வழங்குமாறு கூறப்பட்டுள்ளதாகவும் இந்த இடைக்காலத் தீர்ப்பை விட இறுதித் தீர்ப்பு பொதுவாகக் கூடுதலான பரிந்துரைகளையுடையதாக இருக்குமெனவும் எனவே இடைக்காலத் தீர்ப்புக்குக் குறைவான எந்த ஒரு தீர்வையும் தமிழக அரசு ஏற்கக் கூடாதெனவும் கலைஞர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்ட

ரயில் கடவை ஊழியருக்கு முழுச்சம்பளமும் கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் ரயில் கடவைகளில் பாதுகாப்பு ஊழியர்களாக பணிபுரிந்தவர்களுக்கு இதுவரைகாலமும் வழங்கப்படாத சம்பளம் விரைவில் கிடைக்கவுள்ளது.

கொழும்பில் போக்குவரத்து அமைச்சுடன் யாழ் அரசாங்க அதிபர் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து 30 லட்சம் ரூபாவை இதற்காக அரசு வழங்கியுள்ளது.

1990 ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இவர்கள் வேலையிழந்துள்ளது தெரிந்ததே. 04.06.47

இரு ஐ. தே. க. அதிருப்தியாளர்களை கட்சியிலிருந்து நீக்கியமை சரியானதென நீதிமன்று தீர்ப்பு

ஐ.தே.க அதிருப்தியாளர்களான ஆரியரத்னா ஜெயதிலகா, எஸ். ஏ. முத்து பண்டா ஆகிய இருவரும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டது சட்டப்படியானதே என மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது:

நீதிபதிகள் மார்க் பெர்னாண்டோ, வடுகொட்டபிட்டிய, குலதுங்கா ஆகியோர் தீர்ப்பை வழங்கினர். தீர்ப்பு வழங்கப்பட்ட போது மனுதாரர்கள் செய்த ஆரியரத்னா ஜெயதிலகா, எஸ் ஏ முத்து பண்டா ஆகிய இருவரும் நீதி மன்றில் இருக்கவில்லை

இவர்கள் இருவரும் கட்சியிலிருந்து கொண்டு இரகசியமான முறையில் ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுப் பிரேரணையில் கையெழுத்திட்டிருந்தனர் என குற்றஞ்சாட்டப்பட்டமை தெரிந்ததே

எனினும் இவர்கள் இருவரும் இக் குற்றச்சாட்டை வன்மையாக மறுத்ததுடன் தம்மை ஐ.தே.க விலிருந்து நீக்கியதை ஆட்சேபித்து உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தது நினைவிருக்கலாம்.

மிலக்வைற் தொழிலகத்துக்கு கோஸ்ரிக்சோடா கிடைக்கும்

யாழ். மில்க்வைற் தொழிற்சாலைக்கு சவர்க்காரம் உற்பத்தி செய்ய 2 மெற்றிக் தொன் சோடியிக் சோடாவை கொழும்பிலிருந்து கொண்டு வர கூட்டுப்படை தலைமையகம் அனுமதியளித்துள்ளது

1990 ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பமானதையடுத்து இத்தொழிற்சாலை வேலைகள் நிறுத்தப்பட்டதுடன், ஊழியர்களும் வேலையின்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது. 06, 04

சீநோர் ஊழியர்களுக்கு விசேட உணவு முத்திரை

வடபகுதியில் உள்ள 'சீநோர்' நிறுவனத்தில் பணிபுரிந்து வேலையிழந்த ஊழியர்களுக்கு விசேட உணவு முத்திரைகள் வழங்க அரசு சம்மதித்துள்ளது.

இதேபோல் அடுத்த இரண்டு மாதங்களுக்குரிய பாடசாலை மாணவரின் மதிய உணவு முத்திரைகளும் கப்பலில் வரவுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (04, 06, 47)

மின் உபகரணங்களை லொறி மூலம் எடுத்துவர அனுமதி

கிளிநொச்சி பகுதி மின் மாற்றிகளுக்கு தேவையான 70பரல் ஒயில், மின் உபகரணங்களையும் மற்றும் சிறிய ரக மின் மாற்றிகளையும் லொறிமூலம் அம்மாவட்டத்திற்குகொண்டுசெல்ல கூட்டுப் படைத்தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது

இது தொடர்பாக யாழ் அரச அதிபர் கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளமை தெரிந்ததே. 47, 04

காலமானார்

திருமதி பொன்னையா

புதுத்தோட்டம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்டவரும் இ. பொன்னையாவின் (தெல்லிப்பழை பத்திரிகை விற்பனையாளர்) அன்பு மனைவியாரும் சுப்பிரமணியம், பாக்கியம் என்பவரின் அன்புச்சகோதரியும், வசந்தமலர், ஜெயமலர், வசந்தராணி, ஜெயதேவி, விமலாதேவி, தவராஜா (சவூதி) என்போரின் அன்புத்தாயாரும் முருகையா, கனகலிங்கம், கமலநாதன், குணசேகரம், செல்வராஜா, பராசக்தி என்போரின் அன்பு மாமியாரும் முரளிதரன், கிருபாகரன், பிரபாகரன், பாலதரன், வாசன், மயூரன், ஜெயரூபன், குகரூபன், விஜித்தா, அஜித்தா, மனோதா, சிந்துஜா, சுமிதா எனபோரின் அன்பு பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் (29-02-92) 1:00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும். தயவுசெய்து இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்

கணவன், மக்கள், மருமக்கள்

தெல்லிப்பழை 02057

லண்டன் ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு; 30பேர் காயம்

லண்டனில் பிரிட்ஜ் ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற வெடிகுண்டு வெடிப்பில் 30பேர் காயமடைந்தனர் இதில் 4பேர் படுகாயமடைந்தனர்

ரயில் நிலையத்தின் ஆண்கள் கழிப்பறையில் வைக்கப்பட்ட குண்டு ஒன்றே வெடித்ததாக கூறப்படுகிறது இதனால் காலையில் வேலைகளுக்கு செல்ல ரயில் நிலையத்தில் காத்திருந்தவர்கள் காயமுற்றனர்.

இக்குண்டு வெடிப்பையடுத்து லண்டன் ரயில்களே போக்குவரத்து அனைத்தும் நிறுத்தப்பட்டது.

இதனால் வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாம்.

குண்டு வெடிப்பதற்கு நிமிடங்களுக்கு முன் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக அமதேய தொலைபேசி அழைப்பு உள்ளூர் தொலைக்காட்சி நிலையம் ஒன்றிற்கு கிடைத்ததாகவும் எனினும் குண்டு எங்கு உள்ளது எனக் கூறப்படவில்லை

இக்குண்டு வெடிப்பு காரணம் ஐ. ஆர். ஏ தொடர்பாக்களே எனக் கூறப்படுகிறது.

வீரச்சாவு

வாழைச்சேனை மோதலில் கப்டன் தாசன் (க வீரேந்திரன் ஏறாவூர்) வீரச்சாவு எய்தினார்

பூநகரிப் படையினர் கலிபர் தாக்குதல்

பூநகரி - கல்முனையிலிருந்து இராணுவத்தினர் நேற்று அதிகாலை வேளையில் கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர் சுமார் அரைமணி நேரமாக இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது 47

பலாலியில் 71 பேர் தடுத்துவைப்பு

பலாலி இராணுவ முகாமில் எழுபத்தொரு வடபகுதி இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் வடபகுதி கடலில் வைத்து படையினரால் பிடிக்கப்பட்டவர்கள் எனத் தெரியவருகிறது. 47, 04 06

ஏப்ரல் 2 இல் பரீட்சை

க. பொ. த உயர்தரவிசேட பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபர் நேற்றுத் தெரிவித்தார் 47,6

அரச அதிபர் யாழ். திரும்பினார்

கொழும்பு சென்றிருந்த அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினார்

யாழ். மாவட்டத்தின் முக்கிய பிரச்சினைகள் குறித்து அவர் ஜனாதிபதி, பிரதமர் படைஅதிகாரிகள் சிலகலைமச்சுக்களின் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியுள்ளதாகத் தெரியவருகிறது 06 04, 47

பிறப்புப் பதிவு புத்தகங்கள்

யாழ். மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் உடன் பதிவு செய்து வழங்குவதற்கு பத்தாயிரம் தாளைகள் அடங்கிய 10புத்தகங்கள் கோமாரி கப்பலில் வரவுள்ளன

(40. 06. 47)

கரும் ..

பெற்றிருந்தார் கபிதேவ் ஒட்டங்கள் எதையும் பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கவே ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இரு அணிகளுக்கும் அரைப் பங்கு புள்ளிகள் வழங்கப்பட்டன.

காங்கேசன்துறை...

விடப்பட்டதும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் அங்கு பொறுப்பாகத் தங்கியிருப்பார்.

காங்கேசன்துறை துறைமுகம் பாவனைக்கு திறக்கப்பட்டாலும் பழுதடைந்த துறை துறைமுக வேலைகள் தொடரும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 04, 06, 47

போதைவஸ்து கடத்தல் தடுக்க பிரிட்டன், இந்தியா ஒப்பந்தம்

போதைப் பொருள்களைக் கடத்துபவர்களை நாடுகடத்தவும் அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் இந்தியாவும் பிரிட்டனும் உடன்படிக்கை ஒன்றிற்கு கையெழுத்திட்டுள்ளன,

வேறு ஒரு நாட்டுடன் இவ்வாறான உடன்படிக்கையொன்றில் பிரிட்டன் கையெழுத்திட்டிருப்பது இதுவே முதல் முறை எனத் தெரிவிக்கப்படுகிறது

பிரிட்டனிலுள்ள சிக்கி தீவிரவாதிகளின் சொத்துக்கள் பஞ்சாப் தீவிரவாதத்துக்கு பயன்பட்டது என நிரூபிக்கப்படுமானால் அவர்களை நாடுகடத்தவும், அவர்களின் சொத்துகளை பறிமுதல் செய்யவும் இந்த உடன் படிக்கை வழி செய்கிறதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பர்மா அகதிகள் குரல் ஐ.நா.வில் ஒலிக்க வேண்டு

பர்மாவிலிருந்து வெளியேறி வரும் பல்லாயிரக்கணக்கான அகதிகள் தமது சார்பில் ஐக்கிய நாடுகள் சபையில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் தர வேண்டும் என்று கோரியுள்ளனர்.

தமது நிலைபற்றி ஐ. நா. மன்றம் அனுதாபத்துடன் கவனியாது விட்டால் பங்களாதேஷுக்கு தமது வருகையைத் தடுக்க முடியாது என்று இவர்கள் சார்பில் ஒரு பிரதிநிதி தெரிவித்தார்

தாம் பர்மிய குடிமக்கள் அல்ல என்று பர்மா இராணுவத்தினரால் துன்புறுத்தி வெளியேற்றப் படுவதாகவும் இழக்கு பங்களாதேஷ் அரசு முகாமிலுள்ள ஒருவர் பி.பி.சி.க்குத் தெரிவித்தார்,

பத்திரிகையாளருக்கு சிறைத்தண்டனை

1989ஆம் ஆண்டு சீனாவில் ஜனநாயக கிளர்ச்சியில் ஈடுபட்ட 'பீபிள் டெயிலி' எனும் மக்கள் தினசரிப்பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர்க்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன

இரு...

லம் ஆகியன படையினருக்கு உதவியாக தாக்குதல் நடாத்திய போதும் அதன் மத்தியிலும் புலிகள் படையினர் மீது தாக்குதலை தொடர்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தைதொடர்ந்து இப்பகுதியில் கடும் வான் தாக்குதல் நடை பெற்றது.

இதேசமயம் மரக்காரம் பளையிலிருந்து சென்ற படையினரை புதுக்குளம் பகுதியில் வைத்து புலிகள் கடும் தாக்குதலை தொடுத்தனர்.

வவுனியாவில் தொடர்ந்து விமானத் தாக்குதல் நடை பெற்றுவருகிறது 07

குடாக்கடலில்...

ளும் விடுவிக்கப்படுவார்கள் எனவும் யாழ் அரசாங்க அதிபரிடம் படை அதிகாரிகளால் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இவர்களை விடுவிக்குமாறு கோரி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் மற்றும் மகஜர்கள் குறித்து அரச அதிபர் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார், 06, 04,47

வர்த்தக உறவி புதிய நெருக்கம்

சிங்கப்பூரும் - இந்தியா வர்த்தகத் தொடர்புகள் தீவிரமாக்கும் என அறி கப்படுகிறது,

இது சம்பந்தமான பே வார்த்தைகள் நடத்துவதற்கு கப்பூரிலிருந்து உயர்மட்ட குழுவொன்று கடுத்த வா இந்தியா வருகிறது:

பத்தொன்பது வருடங்களுக் பின்னர் நூறு தொ இறப்பரை இந்தியா சிங் பூருக்கு அனுப்பிவைக்கிற என்பது குறிப்பிடத்தக்க

அரசு...

விமரிசையாக நடத்த மி டிருந்தது. இத்தன மதலைபவங்களுக்கு விள ரம் தேவையினை எ குறி பிடடார்

அரசியல் கட்சிகள் அனை தமே மதலைபவங்களை வைத்து தமது அரசி லாபங்களை தேடிக்கொள்கி றன என அவர் மேலு தெரிவித்தார்,

வல்புல்ல ராகுல தேரோ தொண்டமானின் தி டத்தை கடுமையாக எதிர்ப்பவர் எ பதும் இத்திட்டத்தினா பௌத்தர்களுக்கு ஆபத்து வரும் என எச்சரித்தமை என்பதும் தெரிந்தவையே,

வங்கிக்—

அறையினுள் நுழைய முய றனர்.

எனினும் இவர்களி முயற்சி பலனளிக்காத நிலை யில் மீண்டும் அவர்கள் தா வந்த வானிலேயே ஏற் சென்றுவிட்டனர்,

இப்பத்திரிகை முரசொலி பப்லிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கலவிகங்காடு டச்சுவீதி'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 29-02-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது